# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2015 யு‘லை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பகுதி A எட்டு (08) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இந்த வினா இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள், இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் திரட்டு நிதியுடன்கூடிய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, பெறுமதி சேர் வரியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள், தனியுரிமையாளர் என்பதை விளங்கிக் கொள்ளல் மற்றும் இறுதித் தொக்குடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றின் மீதான பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரீட்சிக்கிறது. மேலும், பங்குடமை மற்றும் அது தொடர்பான சட்டங்கள் மீதான அடிப்படை அறிவையும்கூட பரீட்சிக்கிறது.

விளங்கிக் கொள்கின்ற தன்மை மற்றும் அறிவைக் கொண்டிருந்த பல பரீட்சார்த்திகள் போதுமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. பல பரீட்சார்த்திகள் கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்புடைய 1.3 ஆம் இலக்க வினாவுக்கு சரியான விடையைத் தெரிவு செய்திருக்கவில்லை. மேலும், இறுதித் தொக்கின் பெறுமதியினை துணிகின்ற 1.8 ஆம் இலக்க வினாவுக்கும் சரியான விடை தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பங்குடமை ஒன்றைப் பதிவு செய்வதற்கான தேவைப்பாட்டின் மீதான அறிவு குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் மீதான தங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

இந்த வினா, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதன் மீதான அறிவினைப் பரீட்சித்துள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் திருப்தியற்ற பதில்களை வழங்கியிருந்தனர். விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும்போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

1. விநியோகிக்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி, காசேட்டின் மீதிக்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

2. வைப்புச் செய்யப்பட்டு ஆனால் மாத காலப் பகுதியினுள் தேறாத காசோலைகளின் பெறுமதி கழிக்கப்படவில்லை.

3. அடிப்படைக் கோட்பாட்டு அறிவில் காணப்பட்ட குறைபாடு காரணமாக, பல பரீட்சார்த்திகள், காசேட்டு மீதிக்கான செம்மையாக்கங்களைச் செய்த பின்னர் வங்கிக் கணக்கிணக்கத்திற்கான சரியான மீதியினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, அந்தச் செம்மையாக்கம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் தானாகவே காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், போதுமானளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது திருப்திகரமான ஒரு மட்டத்தில் காணப்பட்டது.

## வினா 03

இந்த வினா, வருமதிகள் பேரேட்டு மீதியுடன் பொதுப் பேரேட்டின் வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கின் கணக்கிணக்கம் மீதான அறிவைச் பரீட்சித்துள்ளது. பல பரீட்சார்த்திகள் வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கினைச் சரியாகத் தயாரித்ததன் மூலம் வெற்றிகரமாகப் புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. பரீட்சார்த்திகள் வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியினை கணக்கிணக்கம் செய்வதற்குத் தெளிவான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. பொதுப் பேரேட்டின் வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வருமதிகள் பேரேட்டின் தனித்தனிக் கணக்குகள் ஆகியவற்றில் பரீட்சார்த்திகள் மட்டுப்படுத்தப்பட்ட அறிவினையே கொண்டிருப்பதைத் தரப்பட்ட விடைகள் வெளிப்படுத்துகின்றன.

## வினா 04

இந்த வினா கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்கான ஆண்டுக்குரிய காவும் பெறுமதி மற்றும் தேய்மானத்தின் கணிப்பீடு மீதான அறிவினைப் பரீட்சித்துள்ளது. இந்த வினா நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் தேய்மானத்தின் கணிப்பீட்டுடன் தொடர்புபட்ட அறிவினை மதிப்பீடு செய்திருந்ததுடன் மிகச் சொற்ப அளவிலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகளால் ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமானதைப் பெறக்கூடியதாக இருந்தது. வினாவினை நன்கு வாசிக்காததால் அளிக்கப்பட்ட விடைகள் மிகவும் குறைபாடுடையதாகவே இருந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது. வினாக்களுக்கு நேரடியான விடைகள் வழங்கப்படவில்லை. கிரயச் செம்மையாக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட திகதிக்கான தேய்மானத்தைக் கணித்தல் ஆகியவற்றில் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## வினா 05

இந்த வினா, நிதிக் கூற்றுக்களின் திகதில் பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளை நிரல் வடிவில் தயாரிப்பது மீதான அறிவைப் பரீட்சித்துள்ளது. இது ஒரு மிகவும் இலகுவான வினாவாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகளாலேயே ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்ள முடிந்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இலாபத்தினைப் பங்கிடுவதில் பிழை விட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்வதில் காணப்பட்ட குறைபாடு காரணமாக இலாபப் பங்கீட்டுக் கூற்றிற்குக்கூட வரைவுகளை செம்மையாக்கம் செய்திருந்தனர்.

## வினா 06

இதுகூட பங்குடமையுடன் தொடர்புபட்ட ஒரு வினாவே ஆகும். இந்த வினா, பங்குடமையில் புதிய பங்காளர் ஒருவர் இணைந்து கொண்ட பின்னர் இலாப நட்டங்களைப் பகிரும் விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள், தற்போது இருக்கின்ற பங்காளர்களின் இழப்பு விகிதம் அத்துடன் புதிய பங்காளரினால் முதலீடு செய்யப்பட வேண்டிய முதலீட்டுப் பெறுமதியினைக் கணித்தல் ஆகியவற்றின் மீதான அறிவைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் புதிய இலாப நட்டப் பகிர்வு விகிதத்தினைச் சரியாகக் கணித்திருந்த போதிலும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பரீட்சார்த்திகளுக்கே இழப்பு விகிதத்தைச் சரியாகக் கணிப்பதற்கு முடிந்திருந்தது. வினாவானது, **நீன்** மூலம் முதலீடு செய்யப்பட வேண்டிய நன்மதிப்புப் பங்கு உள்ளிட்ட மொத்த முதலீட்டுப் பெறுமதியைக் கணிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதனைக் கவனிக்காது, தவறான பதில்களையே வழங்கியிருந்தனர்.

## பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

இந்த வினா பங்குடமை ஒன்றின் வருமானக் கூற்று மற்றும் இலாப – நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு ஆகியவற்றின் தயாரிப்பு மீதான அறிவினைப் பரீட்சித்துள்ளது. பல பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். மேலும், சகல பரீட்சார்த்திகளும் இந்த வினாவுக்கு விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சரியான மாதிரியினைப் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், சிலர் பங்காளர்களின் சம்பளங்களை இலாப – நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் பதிவதற்குப் பதிலாக அதனை வருமானக் கூற்றில் பதிவு செய்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசிக்காது பங்குடமையின் பரீட்சை மீதி, நடைமுறைக் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு முனைந்திருந்தனர். இதனால் பெறுமதிமிக்க நேரம் இழக்கப்பட்டிருந்தது.

### வினா 08

விளையாட்டுக் கழகம் ஒன்றின் அங்கத்தவர்கள் சந்தாக் கணக்கு மற்றும் ஆயுள் அங்கத்துவ கட்டணக் கணக்கு ஆகியவற்றினைத் தயாரிப்பது இந்த வினாவில் எதிர்பார்க்கப்பட்டது. இது, 2014 ஆம் ஆண்டிற்கான சாதாரண அங்கத்துவக் கட்டண வருமானம், ஆண்டின்போது பெற்றுக் கொள்ளப்பட்ட சாதாரண அங்கத்துவக் கட்டணம், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கான நிலுவைகளாக உள்ள சாதாரண அங்கத்துவக் கட்டணம் மற்றும் 2014 ஆம் ஆண்டின் ஒரு வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய ஆயுள் அங்கத்துவக் கட்டணத் தொகை ஆகியவற்றுக்கான கணிப்பீடுகளுக்குரிய செய்கை வழிகளைத் தெளிவாகக் காட்டுவதையும் இது உள்ளடக்குகிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளிக்கவில்லை. இது கழகங்கள் மற்றும் சங்கங்களின் கணக்குகள் மீதான அறிவு மிகவும் இழிவு மட்டத்தில் இருப்பதையே காட்டுகிறது. மேலும், இதற்கு விடையளித்த பரீட்சார்த்திகளின் புள்ளிகள்கூட மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. வினாவானது செய்கை வழிகளைத் தெளிவாகக் காட்டும்படி விசேடமாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அது காட்டப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேவைப்படுத்தப்பட்ட கணக்குகளைத் தயாரித்திருந்த போதிலும் பிழையான செம்மையாக்கங்கள் மற்றும் செய்கை வழிகளைக் காட்டாமை போன்ற காரணங்களால் இந்த வினாவுக்கான புள்ளிகளைப் பெறுவதில் தோல்வி கண்டிருந்தனர்.

### வினா 09

(a) பரிப்பு ஒன்று நடைமுறைப் பரிப்பொன்றாக ஆவதற்காகத் திருப்திப்படுத்த வேண்டிய தேர்வு நிபந்தனைகள் நான்கினை (04) எழுதுவதன் வாயிலாக மிகவும் இலகுவாகப் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்த போதிலும் பலர் அதனைப் பெறுவதற்குத் தவறியிருந்தனர். இங்கு வினாப்பத்திரத்தினை வாசித்து விளங்கிக் கொள்ளாததன் காரணமாக இந்தப் பகுதியினைத் தவிர்த்திருந்தமை அவதானிக்கப்பட்டது. வழங்கப்பட்ட விடைகள்கூட மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது.

(b) முற்றடக்க வருமானக் கூற்றினைத் தயாரிப்பதற்காக எட்டுப் (08) புள்ளிகள் ஒதுக்கப்பட்டன. EPF மற்றும் ETF ஆகியவற்றின் கணிப்பீடுகளுக்காக மிகவும் குறைபாடுடைய விடைகளையே காணக்கூடியதாக இருந்தது. பங்களிப்புகள் நியம வீதங்களில் கணிப்பிடப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தச் செம்மையாக்கத்தைச் செய்வதில் ஏற்பட்ட தோல்வி காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் பிழையாக 14% இனை EPF இற்காகப் பயன்படுத்தியிருந்தனர். விற்பனைகளின் கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்ப மற்றும் இறுதித் தொக்குகள் சரியாகப் பதியப்படவில்லை. இலகுவாகப் பெறத்தக்க புள்ளிகள், முற்றடக்க வருமானக் கூற்றின் சரியான மாதிரி மீது காணப்பட்ட குறைந்த அறிவு மற்றும் குறைந்தளவான விளக்கம் என்பன காரணமாக இழக்கப்பட்டது. பரீட்சார்த்திகள், வினாவில் கேட்கப்பட்டதற்கு மேலதிகமாக கணக்குகளைத் தயாரித்தல் போன்ற தேவையற்ற விடயங்களைச் செய்ததன் மூலம் நேரத்தை விரயமாக்கியிருந்தனர். உதாரணமாக, சில பரீட்சார்த்திகள் வினாவினை வாசித்து விளங்கிக் கொள்ளாது பரீட்சை மீதியைக்கூட தயாரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றில் பெற்ற கழிவுகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட கழிவுகள் ஆகியவற்றைக்கூட சரியாகப் பதிவதற்குத் தவறியிருந்தனர்.

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

(a) இந்த வினா, உரிமையாண்மைப் பங்குகளை விநியோகிப்பதன் அனுகூலங்கள் மூன்றினை (03) எழுதுவதற்குக் கோரியிருந்தது. எவ்வாறாயினும், பகுதி (b) இற்கு அதிக முக்கியத்துவத்தினை வழங்கியதன் காரணமாக பல பரீட்சார்த்திகள் அதற்கு முந்திய இந்தப் பகுதியினைக் கவனிக்காது விட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக, தரப்பட்ட விடைகளும் அதிகளவில் வெற்றியை வழங்கியிருக்கவில்லை. மிகச் சொற்ப அளவிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்ததன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. சிலர் புத்தக அறிவு இன்றி, எடுகோள்களின் அடிப்படையில் பல்வேறுபட்ட பிழையான விடயங்களை எழுதியிருந்தனர்.

(b) முகாமைத்துவத்தின் பயன்பாட்டிற்காக மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது மீதான அறிவினைச் சோதிக்க இங்கு எதிர்பாரக்கப்பட்டது. அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன்கள், அட்டுறு செலவுகள், தொக்கு நட்டங்கள், சொத்துக்களின் தேய்மானம், வருமான வரி மற்றும் ஊழியர் நட்டஈடு போன்ற செம்மையாக்கங்கள் உட்பட அத்தகைய செம்மையாக்கங்களுக்கான கணக்கீட்டுச் செயற்பாடுகளை இந்த வினா எதிர்பார்த்தது. பல பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் பங்குதாரர்களின் பாவனைக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்திருந்தமை, முகாமைத்துவத்தின் பாவனைக்காக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீது தெளிவான விளக்கம் ஒன்றினைப் பல பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. மேலும், பரீட்சார்த்திகள் சரியான மாதிரி மற்றும் ஒரு சரியான வடிவத்தினைப் பயன்படுத்தி தங்களுடைய விடைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவறியிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் பாதிக்கும் அதிகமானதை பெற்றிருந்தனர். மேலும், குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

கணக்கீட்டு நியமங்கள் மீதான அடிப்படை அறிவில் காணப்பட்ட குறைபாடே ஒரு பொதுவான பலவீனமாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் கணிப்பிடப்பட்ட மொத்த இலாபம் சரியானதாக இருக்கவில்லை. வினாவின் நோக்கம் கணக்கீட்டு நியமங்களின் படி, ஊழியர் நட்டஈடு மீதான செம்மையாக்கங்கள், தேய்மானச் செம்மையாக்கங்கள் மற்றும் வருமான வரிச் செம்மையாக்கங்கள் ஆகியவற்றை முன்வைப்பதாக இருந்த போதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இத்தகைய செம்மையாக்கங்களைச் சரியாகச் செய்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் தேவைப்படுத்தப்பட்டதான நிதிக் கூற்றுக்களை முன்வைத்திருக்க வில்லை. பரீட்சார்த்திகள் செய்கை வேலைகளை சரியாகச் செய்ய வேண்டும் என்பதுடன் வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றின் சரியான இடங்களில் சம்பந்தப்பட்ட எண் பெறுமானங்களை காட்டுதலும் வேண்டும். நிதி நிலைக் கூற்று தேவைப் படுத்தப்படாத போதிலும் சிலர் அதனையும்கூட முன்வைத்ததன் மூலம் நேர முகாமைத் துவத்தைப் புறந்தள்ளியிருந்தனர். மேலும், வருமானக் கூற்றின் சில எண் பெறுமானங் களுக்கான செய்கை வழிகள் சரியாகக் காட்டப்படுதல் வேண்டும்.

உதாரணமாக, செய்கை வழிகள் இன்றி விற்பனை விநியோகச் செலவுகளாக ஒரு எண் பெறுமானம் காட்டப்படும்போது, எழுதப்பட்ட எண் பெறுமானத்தில் வழு ஒன்று காணப்படு மாயின், அதில் உள்ளடக்கப்பட்ட ஏனைய பெறுமதிகளுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் இழக்கப்படும்.

பரீட்சார்த்திகள் கணக்கீட்டு எண்ணக்கருக்கள், புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவை பற்றி அதிகமான புரிதல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

**செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான பொதுவான கருத்துக்கள் :**

(1) புதிய பாடத்திட்டத்தை நன்றாகப் படிப்பதுடன் புதிய பாட விடயங்களில் அதிக கவனம் செலுத்தவும்.

(2) புதிய கணக்கீட்டு நியமங்கள் பற்றிய அறிவு மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்.

(3) தெளிவான கையெழுத்தும் சரியான இலக்கமிடலும்

(4) வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

(5) கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவினை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

(6) நேர முகாமைத்துவம்

(7) விடைப்பத்திரத்தை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கம் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிக்கவும்.

(8) ஒரு நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடைதல் என்ற உச்சளவு எதிர்பார்ப்பு டனும் பரீட்சைக்கு முகங்கொடுங்கள்.

- * * * -